ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2255/56 – 2021 නොවැම්බර් 26 වැනි සිකුරාදා – 2021.11.26
2255/56 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 26 ஆந் வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கை தொழில்நுட்பச் சேவைப்பிரமாணக் குறிப்பினைத் திருத்தியமைத்தல்**

*திருத்த இலக்கம் - 03*

பின்வரும் பகுதி I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2015 செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதிய மற்றும் 1930/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை தொழில்நுட்பச் சேவைப்பிரமாணக் குறிப்பு பின்வரும் பகுதி II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளவும் திருத்தியமைக்கப்படுகின்றது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்களும் நிபந்தனைகளும் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல் வலுப்பெறும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

**எம்.ஏ.பீ. தயா செனரத்**
செயலாளர்,
அரசாங்க சேவைகள் ஆணைக்குழு.

2021 நவெம்பர் மாதம் 22 ஆம் திகதி.

**பகுதி** I

திருத்த இலக்கம் 01 - 2016 நவெம்பர் மாதம் 29 ஆம் திகதிய மற்றும் 1995/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

திருத்த இலக்கம் 02 - 2018 யூன் மாதம் 25 ஆம் திகதிய மற்றும் 2077/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

1A – G35447 – 15 (2021/11)

இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**பகுதி** II

7.2.5 ஆட்சேர்ப்பு முறை :

எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களினால் எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளப்பட்ட புள்ளிகளின் திறமை ஒழுங்கின் அடிப்படையிலும் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைவாகவும் நியமிப்பு செய்யும் அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் விண்ணப்பதாரர்கள் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். சாதாரண நேர்முகப் பரீட்சையின் போது அடிப்படைத் தகைமைகள் மாத்திரம் பரீட்சிக்கப்படுவதோடு, தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் எழுத்துமூலப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

7.3.3 ஏனையவை :

(II) உரிய தினத்தன்று அரசாங்க சேவையில் நிரந்தரமானதும் திணைக்களத்துக்குரியதுமான பதவியொன்றில் ஆகக் குறைந்தது 05 வருடங்கள் செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருப்பதுடன் அதனை திணைக்களத் தலைவர் உறுதிப்படுத்தலும் வேண்டும்.

(IV) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்று தண்டனையொன்றைப் பெற்றிருத்தல் ஆகாது.

(I) ஆம் மற்றும் (III) ஆம் பிரிவுகள் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.

7.3.4 ஆட்சேர்ப்பு முறை :

எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களினால் எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளப்பட்ட புள்ளிகளின் திறமை ஒழுங்கின் அடிப்படையிலும் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைவாகவும் நியமிப்பு செய்யும் அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் விண்ணப்பதாரர்கள் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். சாதாரண நேர்முகப் பரீட்சையின் போது அடிப்படைத் தகைமைகள் மாத்திரம் பரீட்சிக்கப்படுவதோடு, தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் எழுத்துமூலப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

10.1.1.1 (IV) அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்று தண்டனையொன்றைப் பெற்றிருத்தல் ஆகாது.

10.2.1.1 (II) அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்று தண்டனையொன்றைப் பெற்றிருத்தல் ஆகாது.

10.3.2.1 (II) அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்று தண்டனையொன்றைப் பெற்றிருத்தல் ஆகாது.

10.3.3.1 (II) அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்று தண்டனையொன்றைப் பெற்றிருத்தல் ஆகாது.

12-219

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.